நாள் -23.02.2024

**STC. No**.934/2022

**ம.சா.1-நாச்சிமுத்து, த/பெ. அப்பாகுட்டி கவுண்டர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 23rd **day of February** 2024.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் படிக்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்வேன். பணம் வராததால் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதாகும். பிரமாண வாக்குமூலம் மற்றும் மனுவினை நான் அளித்த தகவலின் பெயரில் தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான்.

2. கடந்த 10.10.2016ம் தேதியன்று ரூ.10 லட்சம் மற்றும் 10.12.2016ம் தேதி ரூ.10 லட்சமும் கடனுறுதி சீட்டின் பேரில் எதிரி கடன் பெற்றதாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.20 லட்சத்தில் பகுதி தொகையாக அசல் மற்றும் வட்டிக்காக 24.06.2019ம் தேதியிட்ட காசோலையை ரூ.10 லட்சத்திற்கு வழங்கியதாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. மனுவில் காசோலை தொகையான ரூ.10 லட்சத்தில் அசல் மற்றும் வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு 2012 முதல் தெரியும். கடந்த 2010 முதல் 2018 வரை நானும் எதிரியும் கூட்டாக ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எதிரி என்னிடம் பல்வேறு தேதிகளில் அவ்வப்போது பங்கு தொகைக்காக கடன் பெற்று திருப்பி கொடுத்துவிடுவார் என்றால் கடன் அவ்வப்போது பெற்று திருப்பி கொடுத்து வந்தார்.

4. கடன் கொடுத்த காலத்தில் பொறுப்பிற்காக உடுமலைபேட்டை, ஐசிஐசிஐ வங்கி காசோலையான வழக்கு காசோலை உட்பட 7 காசோலைகளை எதிரியிடமிருந்து பெற்றேன் என்றால் வழக்கு காசோலை மட்டும் தான் என்வசம் உள்ளது. மேற்படி 7 காசோலைகளும் எதிரியால் கையொப்பம் மட்டும் செய்யப்பட்டு நிரப்பபடாமல் வெற்று காசோலையாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. மேலும் அந்த காலத்தில் எதிரியிடமிருந்து கையொப்பம் மட்டும் பெற்று நிரப்பபடாத 4 கடனுறுதி சீட்டுகளும் பெற்றேன் என்றால் சரியல்ல. 2 கடனுறுதி சீட்டுகள்

தான் எதிரி எழுதி கொடுத்தார். மேற்படி அந்த காலத்தில் ரூ.20/- முத்திரை தாள்கள் மற்றும் 6 பச்சை தாள்களில் நிரப்பபடாமல் கையொப்பம் மட்டும் பெற்று வைத்தேன் என்றால் சரியல்ல. 2014 ம் காலக்கட்டத்தில் எதிரி பெற்ற கடனிற்காக பொறுப்பிற்காக எதிரிக்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களுக்கு எதிரி கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தார் என்றால் நான் கொடுத்த பணத்திற்காக எழுதி கொடுத்தார்.

6. மேற்படி கடனை நான் திரும்ப பெற்று கொண்டு கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். எதிரி இரு முறை கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றாலும் அதன்பின்னர் அவற்றை ரத்து செய்து கொடுத்தேன் என்றால் பணத்தை கொடுத்தவுடன் ரத்து செய்து கொடுத்துவிட்டேன். 23.07.2019 ம் தேதியன்று எதிரிக்கு ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 10.10.2016 ம் தேதியன்று எதிரி என்னிடம் ரூ.20 லட்சம் கடன் பெற்றதாகவும் அதற்காக 2 கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கு காசோலை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

7. 24.08.2019 ம் தேதியன்று ம.சா.ஆ.5 கூடுதல் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றாலும் அதில் 10.10.2016 மற்றும் 10.12.2016 ஆகிய தேதிகளில் தலா ரூ.10 லட்சம் கொடுத்தாக வாசித்து கொள்ளுமாறு கூறி அனுப்பினேன் என்றால் சரிதான். மேலும் 24.08.2019 ம் தேதியன்று மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் வழக்கறிஞர் அனுப்பியிருப்பார் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அறிவிப்பு எனக்கு வாசிக்க தெரியாது.

8. ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு 23.07.2019 ம் தேதியன்று அனுப்பிய பிறகு ஒரு மாதம் கழித்து தான் வழக்கு காசோலை மற்றும் கடனுறுதி சீட்டுகளை நிரப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அதற்கு பின்னர் ம.சாஆ.5 அனுப்பினேன் என்றால் சரியல்ல. காசோலையை நானாக நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு, மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் எந்த தேதியில் எங்கு வைத்து கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. காசோலை தேதிக்கு 10 நாட்களுக்கு முன்னர் கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை கொடுத்தார்.

9. மேற்படி விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு, மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளேன். ரூ.20 லட்சத்தை சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்தெந்த சாட்சிகள் என்று மனுவில் குறிபிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கடந்த 21.05.2014 ம் தேதியன்று போட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை

12.10.2015 ல் ரத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். **(21.05.2014 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.1 மற்றும் 12.10.2015 தேதியிட்ட ரத்து பத்திரம் இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

10. கடந்த 03.01.2014 ம் தேதியன்று போட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை 28.04.2014 ல் ரத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். **(03.01.2014 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.3 மற்றும் 28.04.2014 தேதியிட்ட ரத்து பத்திரம் இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி என்னிடம் எந்த தேதியிலும் ரூ.20 லட்சம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் அதற்காக கடனுறுதி சீட்டோ காசோலையோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

11. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புகளுக்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் எதிரி பணமோ பதில் அறிவிப்போ கொடுக்கவில்லை. 29.11.2019 ம் தேதியன்று எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அவர் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. அதன் நகலை எனக்கும் அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. 17.12.2019 ம் தேதியன்று அதற்கு நான் பதில் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் எதிரிக்கு எவ்வித அறிவிப்பும் அனுப்பவில்லை. பதில் அறிவிப்பு அனுப்பிவிட்டு என் வழக்கை பாத்திக்கும் என்பதால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. காசோலை தொகைக்காக கடனுறுதி சீட்டின் பேரில் தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.454/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கில் நான் தாக்கல் செய்த பிராது என்றால் சரிதான். **(அசல் வழக்கில் நான் தாக்கல் செய்த பிராது இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னுடைய வழக்கு பொய் வழக்கு என்பதால் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு மற்றும் நான் தனிப்பட்ட முறையில் அனுப்பிய அறிவிப்பை இவ்வழக்கில் எங்கும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

13. 10.10.2016 ம் தேதிக்கு பின்னர் எதிரி என்னிடம் ஏதாவது பரிவர்த்தனை நடைபெற்றதா என்றால் 10.12.2016 ம் தேதியன்று எதிரி என்னிடம் பணம் பெற்றார். 10.10.2016 ம் தேதியன்று பெற்ற பணத்திற்கு எதிரி ஏதாவது வட்டி தொகை கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. 2 கடனுறுதி சீட்டுகளுக்கும் எதிரி எவ்வித வட்டி கொடுத்தாரா

என்றால் கொடுக்கவில்லை. நான் கொடுத்தாக கூறும் ரூ.20 லட்சத்தினை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கியின் மூலம் கொடுத்தேனா என்று இவ்வழக்கில் எங்கும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ரொக்கமாக தான் கொடுத்தேன்.

14. நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. நான் 2016 கடைசியில் தோப்பு விற்ற பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி விபரத்தை இவ்வழக்கில் எங்கும் கூறவில்லை என்றால் சரிதான். 10.10.2016 மற்றும் 10.12.2016 ம் தேதிக்கு பின்னர் 23.01.2018 ம் தேதியன்று எதிரியினுடைய அசையா சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை, வாங்கியிருக்கலாம். பணம் கொடுத்து வாங்கியிருப்பேன். **(23.01.2018 ம் தேதியிட்ட கிரையபத்திரத்தின் இணையதளத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

15. புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எதிரிக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுத்திருந்தால் 23.01.2018 ம் தேதியன்று எதிரிக்கு பணம் கொடுத்து அவருடைய சொத்தை கிரையம் பெற்றிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 ன் படி வழக்கை காலவறையறைக்குள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கம் இடையே வியாபாத்தில் ஏற்பட்ட பகையின் காரணமாக பொறுப்பிற்காக வழங்கிய காசோலை மற்றும் கடனுறுதி சீட்டுகளை தவறாக பயன்படுத்தி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிறக்கான வியாஜிய மூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.02.23 01:39:23 -1000

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**